LIBRARY, STATE LEGISLATURE
- 1 OCT 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, the 19th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. SPEAKER (THE HON. SRI S. CHELLLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

விவசாய வருமானவரி

*316 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாய வருமானவரி வசூலிக்கப்படுவதில் உடன்பாடு மதிப்பீடு (**Composition of Agricultural Income-tax**) செய்யப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், 1962–63-ல் மொத்த வரி விதிப்பு எண்ணிக்கையில் எத்தனை பேருக்கு (**Composition of Agricultural Income-tax**) முறையில் வரி விதிக்கப்பட்டது ?

(உ) இது மொத்த வரியில் எத்தனை சத விகிதம் ?

கனம் திரு வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) 28,897 பேருக்கு.

(உ) மொத்த வரித் தொகையில் இது 8 சத விகிதம்.

திரு. து. ப. அழகமுத்து : இப்படிக் கம்பவுண்ட் செய்து கொள்ள அனுமதிப்பதன் மூலம் சர்க்கார் வருமானத்தில் குறைவு ஏதேனும் காணப்படுகிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : சர்க்கார் வருமானத்தில் கொஞ்சம் குறைவு ஏற்படத்தான் செய்யும். இருந்தாலும் விவசாயிகளுக்கு அதிகத் தொந்தரவு இருக்கக் கூடாது என்பதற்காகவே இந்தச் சலுகையை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : விவசாய வருமான வரிக்கு என்று தனிச் சட்டங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் செலவு அதிகமாக ஏற்படுவதால் மற்ற வரிகளுடனேயே சேர்த்து இந்த வருமான வரியையும் சேர்த்துப் போட அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கின்ற முறையை மாற்று வதாக உத்தேசம் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : பொதுவாக இதிலே வரக்கூடிய வருமானம் குறைவாக இருப்பதால் விவசாயிகளுடைய நன்மையை உத்தேசித்து விவசாய வருமான வரியை எடுத்து விட வேண்டுமென்ற அபிப்பிராயம் அரசாங்கத்துக்கு உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த மாதிரி அபிப்பிராயம் இல்லை.

திரு. கி. இரா. சம்பந்தம்: *சீலிங் ஆபீசர் என்று ஒவ்வொரு டிவிஷனிலும் வைத்திருக்கிறார்கள். அவர் மூலமாகவே இந்த வரியை வசூல் பண்ண ஏற்பாடு செய்து இப்போதிருக்கக்கூடிய அக்ரிகல்சரல் இன்கம்டாக்ஸ் ஸ்தாபனத்தை எடுத்துவிட சர்க்கார் முன் வருமா ?*

கனம் திரு. வெ. ராமைய்யா : *சீலிங் ஆபீசருக்கு இருக்கக்கூடிய வேலையைத் தங்கு தடையின்றி பார்த்தாலே போதும். இதிலே எந்த விதமான மாறுதலையும் செய்வதாக இல்லை.*

திரு. ஜே. மாதா கவுடர் : *கம்பவுண்டிங் செய்வதற்கு விவசாயிகள் வருஷா வருஷம் எழுத வேண்டியிருக்கிறது. மூன்று வருஷத்திற்கு ஒரு முறை கம்பவுண்டிங் செய்யலாம் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?*

கனம் திரு வெ. ராமைய்யா : *இப்போது இருக்கக்கூடிய முறை வருஷா வருஷம் விவசாயிகள் கம்பவுண்டிங் செய்வதற்கான கோரிக்கையைக் கொடுக்க வேண்டும் என்பது தான். அது தான் விவசாயிகளுக்கு நன்மையைத் தரும். மூன்று வருஷத்திற்கு ஒரு முறை என்று வைத்து விட்டால் சில சந்தர்ப்பங்களில் கம்பவுண்டிங் செய்வதற்குப் பதிலாக நேரடியாகக் கணக்குக் கொடுப்பதால் விவசாயிகளுக்கு லாபம் கூட இருக்கலாம். ஆகவே இப்போது இருப்பது தான் விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய முறை.*

Arrears of Taxes

* 317 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount of arrears as on 31st March 1963 in the collections of (1) Sales tax, (2) Entertainment tax and (3) Agricultural Income-tax; and

(*b*) the reasons for the accumulation of the arrears?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *Sales Tax* :

		RS.
(i) Madras General Sales Tax	...	2,31,79,474
Central Sales Tax	... ...	46,79,622
Total	...	2,78,59,096

		RS.	NP.
(ii) Entertainment Tax	... ...	4,57,526	00
(iii) Agricultural Income-Tax	... ...	30,32,846	69

The arrears have to be recovered by the various processes of action such as action under the Madras Revenue Recovery Act, filing of applications before Magistrates for the recovery of the arrears, issue of notices to others holding money to the credit of defaulters, etc. A portion of the arrears is covered by stay orders issued on appeals and revision petitions and non-expiry of notice time. Action under the Revenue Recovery Act is a long drawn process as elaborate statutory formalities have to be observed. Applications to the court are made only after exhausting all the remedies and the courts also have to make a thorough investigation